




புதுகை
# வரலாறு நாளிதழ்
WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351








சனி ❖ ஜூலை. 02, 2022 சென்னை & புதுக்கோட்டை 4 பக்கம் ❖ வரலாறு 7 ❖ இதழ் 263 ❖ ரூ.10


அதிகரிக்கும் கொரோனா : முதல்வர் ஸ்டாலின் ஆலோசனை

# மறுபடியும்

## கொரோனா பரவல் எதிரொலியாக உயர் அதிகாரிகளுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று ஆலோசனை மேற்கொண்டார்

சென்னை ஜூலை.02-

தமிழகத்தில் சமீபத்திய நாட்களாக மீண்டும் அதிகரித்து வரும் கொரோனாவால் இயல்பு வாழ்க்கை பாதிக்கபடும் அபாயம் ஏற்ப்பட்டுள்ளதால், நேற்று தமிழகமுதல்வர் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்க்கொண்டார்.



தமிழகத்தில் நேற்றுமுந்தினம் 29524 பேருக்கு கொரோனா பரிசோதனை செய்யப்பட்டதில் 2069 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டது. கொரோனா தொற்று பரவல் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் கட்டுப்பாடுகளை தீவிரப்படுத்த தமிழக அரசு ஆலோசனைசெய்து வருகிறது. இதையடுத்து பொது இடங்களில் முக கவசம் அணிவது கட்டாயமாக்கப் பட்டுள்ளது. முககவசம் அணியாதவர்களுக்கு அபராதமும் விதிக்கப்பட்டு வருகிறது.

பள்ளி வரும் மாணவர்களுக்கு புதிய வழிகாட்டுநெறிமுறைகள் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி பள்ளி வளாகத்தில் மாணவர்கள் முக கவசம் அணிவது, பள்ளிக்கு வரும் போதே வளாகத்தில்உடல்வெப்ப நிலை பரிசோதிப்பது, தடுப்பூசி போடுவதை உறுதி செய்வது உள்ளிட்டவைகளை பள்ளி நிர்வாகம் கடைபிடிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் கொரோனா பரவலை கட்டுப்படுத்துவது தொடர்பாக முதலமைச்சர் ஸ்டாலின் நேற்று அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார். சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற இந்த ஆலோசனையில் தலைமைச் செயலாளர் இறையன்பு,பொதுத்துறை செயலாளர், சுகாதாரத்துறை செயலாளர், வருவாய் பேரிடர் துறை உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.

கொரோனாவை கட்டுப்படுத்த இதுவரை எடுக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பற்றி முதலமைச்சரிடம் அதிகாரிகள் விளக்கினர். ஏற்கனவே முகக்கவசம் கட்டாயம் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், மேலும் கொரோனா பாதிப்பு அதிகரிக்கும் பட்சத்தில், கொண்டு வரப்பட வேண்டிய கட்டுப்பாடுகள் குறித்தும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது தகவல்கள் தெரிவிக்கின்றன.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று சென்னை, காமராஜர் சாலையில், 44ஆவது செஸ் ஒலிம்பியாட்-2022 போட்டி குறித்து விளம்பரம் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், செஸ் ஒலிம்பியாட் இலட்சினை மற்றும் சின்னத்துடன் பல்வேறு வாசகங்கள் பொறிக்கப்பட்ட 15 பேருந்துகளை தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் கே.என் நேரு, எஸ்.எஸ்.சிவசங்கர், சிவ.வீ.மெய்ய நாதன், சட்டமன்ற உறுப்பினர் உதயநிதி ஸ்டாலின், தலைமை செயலாளர் இறையன்பு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## 10–க்கும் மேற்பட்டோர் கூடும் நிகழ்வுகளில் முகக்கவசம் அவசியம்– அமைச்சர் மா.சுப்பிரமணியன்

சென்னை ஜூலை.02-

"பத்துக்கும் மேற்பட்டவர்கள் ஓரிடத்தில் ஒன்றாக கூடுகின்ற நிகழ்வுகள் எதுவாக இருந்தாலும், அங்கு அனைவரும் முகக்கவசங்கள் அணிந்து கொள்வது அவசியம்" என்று மருத்துவத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியுள்ளார்.




சென்னை எழும்பூர் தாய் சேய் நல மருத்துவமனை வளாகத்தில் இந்திய மகளிர் சிறப்பு சிறுநீரியல் சங்கம் மற்றும் எழும்பூர் அரசு தாய் சேய் நல மருத்துவமனையும் இணைந்து நடத்தும் மகளிர் சிறப்பு சிறுநீரியல் சர்வதேச மாநாட்டை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று தொடங்கி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் கூறியது: "தமிழகத்தைப் பொறுத்தவரை, கரோனா தொற்று பாதிப்பு நேற்றும், இன்றும் 2 ஆயிரத்தை கடந்த நிலை நீடித்துக் கொண்டிருக்கிறது.

பெரிய அளவில் உயிரிழப்புகள் போன்ற பாதிப்புகள் இல்லையென்றாலும், பரவும் தன்மையைப் பொறுத்தவரை வேகமாக பரவும் தன்மை உடையது என்பதால், ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு வந்தாலும்கூட, வயது வித்தியாசமில்லாமல் அனைவருக்குமே இந்த பாதிப்பு தொடர்கிறது.

இதிலிருந்து நம்மை தற்காத்துக் கொள்வதற்கு, அரசின் விதிமுறைகளை தொடர்ந்து கடைபிடிக்க வேண்டும். 10-க்கும் மேற்பட்டவர்கள் ஓரிடத்தில் ஒன்றாக கூடுகின்ற நிகழ்வுகள் எதுவாக இருந்தாலும், அங்கு அனைவரும் முகக்கவசங்கள் அணிந்து கொள்வது அவசியம்" என்று அவர் தெரிவித்தார்.

## சமூகவலைதளங்களில் தனது கட்சி பொறுப்பை மாற்றிக்கொண்ட எடப்பாடி பழனிசாமி!

சென்னை ஜூலை.02-

அதிமுக இணை ஒருங்கிணைப்பாளர் என தனது சமூகவலைதள பங்கங்களில் குறிப்பிட்டிருந்ததை தலைமை நிலைய செயலாளர் என எடப்பாடி பழனிசாமி மாற்றியுள்ளார்.



அதிமுகவில் ஒற்றை தலைமை விவகாரத்தால் உட்கட்சி மோதல் உச்சகட்டத்தை எட்டியுள்ளது. அதிமுக தலைவராக எடப்பாடி பழனிசாமி பொறுப்பேற்க வேண்டும் என அவரது ஆதரவாளர்கள் போர்க்கொடி உயர்த்தி உள்ளனர். அதே சமயம் இரட்டை தலைமை என்பதே போதுமானது என்று ஓபிஎஸ் தரப்பு கூறி வருகின்றனர். இந்த சூழலில் கடந்த 23ம் தேதி கூட்டப்பட்ட பொதுக்குழு கூட்டத்தில் தீர்மானங்கள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக அதிமுவில் ஒருங்கிணைப்பாளர் மற்றும் இணை ஒருங்கிணைப்பாளர் பதவிகள் காலவதி ஆகிவிட்டதாக எடப்பாடி பழனிசாமி தரப்பு அறிவித்தது. இதன் காரணமாக ஓ.பன்னீர்செல்வம் ஒருங்கிணைப்பாளர் இல்லை என்றும் அவர் கட்சியின் பொருளாளர் மட்டுமே என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் எடப்பாடி வெளியிட்ட அறிக்கைகளிலும் அவர் அதிமுக தலைமை நிலையச் செயலாளர் என்றே தன்னை குறிப்பிட்டு வந்தார். ஓ.பன்னீர்செல்வத்துக்கு நேற்று முன்தினம் எடப்பாடி எழுதிய கடிதத்தில் கூட, கடந்த 23-ம் தேதி கொண்டுவரப்பட்ட கட்சி சட்ட திட்ட திருத்தங்கள் அங்கீகரிக்கப்படவில்லை. ஆதலால், அந்த சட்ட திட்ட திருத்தங்கள் காலாவதி ஆகிவிட்டது.

## இந்தியாவில் சுதந்திர தினம், குடியரசு தினம் போலத்தான் ஜிஎஸ்டி அமல்படுத்தப்பட்ட நாளும் : ஆளுநர் ரவி கருத்து




சென்னை ஜூலை.02-

"இந்தியாவில் சுதந்திர தினம், குடியரசு தினம், மகாத்மா காந்தி பிறந்த தினம் போன்று ஜி.எஸ்.டி அமல்படுத்தப்பட்ட நாளும் ஒரு முக்கியமான தினம்" என்று தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி தெரிவித்துள்ளார்.

சென்னை கலைவாணர் அரங்கில் 5-வது தேசிய ஜி.எஸ்.டி தின விழா, ஜி.எஸ்.டி கவுன்சில் சார்பாக நடைபெற்று வருகிறது. இந்த விழாவில் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி, தமிழ்நாடு - புதுச்சேரி சரக்கு மற்றும் சேவை வரிக்கான தலைமை ஆணையர் எம்.வி.எஸ்.சௌத்ரி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். மேலும் சிறப்பாக பங்களிப்பு செய்த நிறுவனங்களுக்கு ஆளுநர் விருதுகளை வழங்கினார். தொடர்ந்து நிகழ்ச்சியில் பேசிய ஆளுநர், "இந்த நாள் நமது நாட்டின் மிக முக்கியமான ஒரு நாளாகும். சுதந்திர தினம், குடியரசு தினம், மகாத்மா காந்தி பிறந்த தினம் போன்று, இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு, ஜி.எஸ்.டி அமல்படுத்தப்பட்ட தினம் மிகவும் முக்கியமான ஒன்று.

அதேபோல் 'ஒரே பாரதம், உன்னத பாரதம்' என்பது நமது அரசியலமைப்பிலேயே உள்ளது. இந்தியாவில் கூட்டாட்சி பற்றி பேசுவது மிகவும் முக்கியமென்றாலும், இந்திய நாடு மிக நீண்ட வருடத்திற்கு முன்பே பிறந்துவிட்டது என்பதையும் நான் நினைவில் கொள்ள வேண்டும். அப்போது இந்தநாடுபலமாநிலமாக பிரிந்திருந்தது. மேலும் அப்போது நம் முன்னோர்களின் பாரத நாடு என்ற எண்ணம் முற்றிலும் வேறுபட்டது. அந்த வகையில் இந்த நாடு ஒரு அகண்ட பாரதம். அதேநேரம் பாரதம் என்பது ஒன்றே. பாரதத்தில் பல மொழி கலாச்சாரம் உள்ளது. அதுவே பாரதத்தின் அழகு" என்றார்.

மேலும் பேசுகையில், "மகாகவி பாரதியார், விவேகானந்தர் உள்ளிட்டோரின் கருத்துக்களும் ஒரே பாரதம் என்கிற வகையில் தான் இருக்கும். சர்தார் பட்டேல் எப்படி இந்த நாட்டை ஒன்றாக இணைக்க முயற்சி செய்தாரோ, அதே போல தான் ஜி.எஸ்.டி மூலம் ஒரே நாடு, ஒரே வரி என்பதன் வாயிலாக ஒன்று இணைகிறது.

ஜி.எஸ்.டி மக்களுக்கு, வியாபாரிகளுக்கு எளிமையாக்கி உள்ளது. தமிழ்நாட்டில் கடந்த 4 வருடத்தில் ஜி.எஸ்.டி மூலம் 35 கோடி முதல் 1500 கோடி வரை லாபம் அதிகரித்து உள்ளது. இதன் அடிப்படையில் அடுத்த 25 வருடத்தில் உலக அரங்கில் இந்திய பலமான நாடாக இருக்கும்" என்று ஆளுநர் நம்பிக்கை தெரிவித்தார்.

## கேரளாவில் ஆந்த்ராக்ஸ் நோய் பரவல் அபாயம் – உஷார் நிலையில் சுகாதாரத்துறை

திருவனந்தபுரம் ஜூலை.02-

கேரளா மாநிலம் அதிரப் பள்ளி வனப்பகுதியில் ஆந்தராக்ஸ் தொற்று பரவல் கண்டறியப்பட்டுள்ளது. இங்குள்ள அதிரப்பள்ளி நீர் வீழ்ச்சி புகழ்பெற்ற சுற்றுலாத்தலமாக்கும். இந்த ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் தொடர்ச்சியாக வந்து செல்லும் நிலையில், இந்த நீர் வீழ்ச்சியை ஒட்டியுள்ள பகுதியில் ஏராளமான காட்டுப் பன்றிகள் செத்து கிடந்தது கண்டறியப்பட்டது.

இதையடுத்து, வனத் துறையினருக்கு தகவல் அளிக்கப்பட்டதன் பேரில் அவர்கள் இறந்த பன்றிகளின் மாதிரிகளை சோதனைக்காக எடுத்து ஆய்வு கூடத்திற்கு அனுப்பி வைத்தனர். இந்த பரிசோதனையின் முடிவில் பன்றிகளுக்கு ஆந்தராக்ஸ் தொற்று இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த விலங்களை மீட்டு பரிசோதனை மேற்கொண்ட 13 பேர் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த ஆந்தராக்ஸ் பாதிப்பானது விலங்குகள் இடையே தீவிரமாகப் பரவும் என்பதால் பாதிப்பானது மற்ற விலங்குகளுக்கு பரவாமல் இருக்க சுகாதாரத்துறை தீவிர கண்காணிப்பில் உள்ளது. இது தொடர்பாக அம்மாநில சுகாதாரத்துறை அதிகாரி கூறுகையில், கேரளாவில் ஆந்தராக்ஸ் நோய் பரவியுள்ளது. அதேவேளை இது குறித்து பொதுமக்கள் அச்சப்பட தேவையில்லை. இது காற்று மூலமாகப் பரவக் கூடியது அல்ல. மற்ற விலங்குகளுக்கு தொற்று பரவாமல் தடுக்க அரசு தீவிர நடவடிக்கைஎடுத்து வருகிறது என்றார்.

பெசில்லஸ் ஆந்திராசிஸ் என்ற பேக்டீரியா விலங்குகளை பாதிப்பதன் மூலம் இந்த ஆந்தராக்ஸ் நோய் பரவுகிறது. பாதிக்கப்பட்ட விலங்களுடன் மனிதர்கள் தொடர்பு கொள்வதன் மூலமாகவே, அந்த விலங்குகள் மற்றும் அதன் பொருள்களை உண்பது மூலமாகவோ இந்த தொற்று பரவும் அபாயம் உள்ளது.




# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.4,683 | Rs.5,082 |

## வரலாற்றில் இன்று

1889 ஈபெல் கோபுரம் பாரிசில் பொதுமக்களுக்காக அதிகாரபூர்வமாகத் திறந்துவிடப்பட்டது.

1910 ஐந்தாம் ஜோர்ஜ் அவரது தந்தை ஏழாம் எட்வேர்டின் இறப்பை அடுத்து ஐக்கிய இராச்சியத்தின் மன்னனாக முடி சூடினார்.

1916 21 லெபனான் தேசியவாதிகள் பெய்ரூட்டில் தூக்கிலிடப்பட்டனர்.

1916 பிரெஞ்சு அரசுக்கு எதிராகக் கிளர்ச்சியைத் தூண்டி விட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட வியட்நாம் பேரரசர் தூய் தான் கைது செய்யப்பட்டார். இவர் பின்னர் ரீயூனியன் தீவுக்கு நாடு கடத்தப்பட்டார்.

1937 இன்டன்பர்க் பேரிடர்: செருமனியின் இன்டன்பேர்க் என்ற வான்கப்பல் லேக்கேர்சுடு, நியூ செர்சியில் தீப்பிடித்ததில் 36 பேர் உயிரிழந்தனர்.

1942 இரண்டாம் உலகப் போர்: பிலிப்பீன்சில் நிலை கொண்டிருந்த கடைசி அமெரிக்கப் படைகள் சப்பானிடம் சரணடைந்தன.

1945 இரண்டாம் உலகப் போர்: கிழக்கு ஐரோப்பாவின் கடைசிப் பெரும் சமர் பிராகா நகரில் ஆரம்பமானது.

1954 ரோஜர் பேனிஸ்டர் ஒரு மைல் தூரத்தை நான்கு நிமிடங்களுக்குள் கடந்த வீரர் என்ற சாதனையை ஏற்படுத்தினார்.

1960 வெஸ்ட்மின்ஸ்டர் மடத்தில் இருந்து முதல் தடவையாக அரச திருமணம் ஒன்று தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. இளவரசி மார்கரெட், அந்தனி ஆர்ம்ஸ்ட்ரோங்-யோன்சு ஆகியோரின் திருமணத்தை 20 மில்லியன் பேர் கண்டுகளித்தனர்.

1967 சாகிர் உசேன் இந்தியாவின் முதல் முசுலிம் குடியரசுத் தலைவரானார்.

1975 100,000 ஆர்மீனியர் பெய்ரூட்டில் நடந்த ஆர்மீனிய இனப்படுகொலையின் 60-வது நினைவுநாள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

1976 இத்தாலியில் இடம்பெற்ற 6.5 அளவு நிலநடுக்கத்தில் 900-978 பேர் உயிரிழந்தனர்.

1984 சியோல் நகரில் 103 கொரிய மாவீரர்களை திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் புனிதர்களாக அறிவித்தார்.

1988 நோர்வேயில் வானூர்தி ஒன்று டோர்காட்டன் மலையுடன் மோதியதில் வீழ்ந்ததில் அதில் பயணம் செய்த அனைத்து 36 பேரும் உயிரிழந்தனர்.

## புதுக்கோட்டை மாவட்ட நலக்கல்வி அலுவலர் தமிழ்ச்செம்மல் கவிஞர் ஜீவிக்கு பணி நிறைவு பாராட்டு விழா



புதுக்கோட்டை ஜூலை.02-

புதுக்கோட்டை மாவட்ட நலக்கல்வி அலுவலராக இருந்து பணி நிறைவு பெற்ற"தமிழ்ச்செம்மல்" கவிஞர் ஜீவிக்கு மருத்துவ பணிகள் தொழுநோய் அலுவலகத்தில், மாவட்ட துணை இயக்குநர் பணி விடுப்பு ஆணையை வழங்கி சால்வை அணிவித்து நினைவுப் பரிசு வழங்கி வாழ்த்தினார்.

தொடர்ந்து புதுக்கோட்டை மாவட்ட துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்), துணை இயக்குநர் (குடும்ப நல பணிகள்) மற்றும் நிர்வாக அலுவலர் (குடும்ப நலம்) இணை இயக்குநர் ராமு, மற்றும் அலுவலக கண்காணிப்பாளர்கள், அலுவலக பணியாளர்கள் வாழ்த்தி பாராட்டினர்.

அறந்தாங்கி ராஜேஸ்வரி மஹாலில் பணி நிறைவு பாராட்டு விழா நடைபெற்றது. இதில் அரசு ஊழியர் சங்க மாநில தலைவர் அன்பரசு, தமிழ்நாடு பொது சுகாதாரத்துறை அலுவலர், சங்க மாநில பொது செயலாளர் அன்பு நிலவன், துணை இயக்குநர் (மருத்துவ பணி ஓய்வு) சாமியப்பன், இணை இயக்குநர் ராமு, புதுக்கோட்டை சிபிஎம் மாவட்ட செயலாளர் கவிவர்மன், அரசு ஊழியர் சங்க பொருளாளர் ரமாராமநாதன், ரெங்கசாமி, த.மு.எ.ச கவிஞர் முத்துநிலவன், புதுக்கோட்டை மாவட்ட புத்தக திருவிழா குழுவினர்கள் ராஜ்குமார், மணவாளன், வீரமுத்து, பிரபாகர், முத்துக்குமார், ரோட்டரி சங்க வர்த்தக சங்கம், அரசு ஊழியர்கள், தமிழ்நாடு பொது சுகாதாரத்துறை அலுவலர் சங்கம் மாவட்ட மாநில நிர்வாகிகள் உள்ளிட்ட பல்வேறு அமைப்பை சேர்ந்தவர்கள் கலந்து கொண்டு "தமிழ்ச்செம்மல்"கவிஞர் ஜீவியை பாராட்டி வாழ்த்தி விழாவினை சிறப்பித்தனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை அஜீத், சுஜீத், லேப் டெக்னீசியன் வாணி வெங்கட்ராமன், பீர்முகமது ஆகியோர் கவனித்தனர். நிறைவாக ஜீவி நன்றி கூறினார்.




## மதுரை தபால் துறை உதவி இயக்குனருக்கு மத்திய அரசின் மேகதூத் விருது



மதுரை ஜூலை.02-

சிறப்பாக பணியாற்றியதற்காக மதுரை தபால் துறை உதவி இயக்குனருக்கு முன்மாதிரி பணியாளர் விருது வழங்கப்பட்டது.

தபால் துறை சார்பில் ஒவ்வொரு வருடமும் சிறப்பான சேவையாற்றிய பணியாளர்களுக்கு மத்திய தபால் துறை மற்றும் ஒலிபரப்புத்துறை அமைச்சகத்தின் சார்பில் மேகதூத் விருது வழங்கப்படுகிறது.

இதற்கிடையே, இந்த ஆண்டுக்கான மேகதூத் விருதை மதுரையில் உள்ள தென்மண்டல தபால்துறைத்தலைவர் அலுவலகத்தின் உதவி இயக்குராக பணியாற்றி வந்த கே.கலைவாணி பெற்றுள்ளார். இவர், தபால் வங்கி சேமிப்பு கணக்கு நடைமுறையை தற்போதைய தொழில்நுட்பத்துக்கு ஏற்ப எளிதாக மாற்றும் திட்டத்தை திறமையாக செயல்படுத்தியதற்காகவும், தபால்துறை வாடிக்கையாளர்களின் குறைகளை தீர்ப்பதற்கான கண்காணிப்பு தொழில்நுட்பத்தை உருவாக்கினார்.

அத்துடன்,தபால்துறை நடவடிக்கைகளை எளிமையாக்கும் பல திட்டங்களைசெயல்படுத்தியதற்காகவும்அவருக்குஇந்த விருதுவழங்கப்பட்டுள்ளது. அத்துடன், தபால்துறையில் பெண் பணியாளர்களுக்கான முன்மாதிரி என்பதை இவர்நிரூபித்துள்ளதாகவும் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, இந்த விருதை டெல்லியில் நடந்த நிகழ்ச்சியில் துறையின் அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவிடம் இவர் பதக்கம், பாராட்டு சான்றிதழை பெற்றுக் கொண்டார். கடந்த 2002-ம் ஆண்டு தபால் துறையில் தபால் உதவியாளராக பணியில் சேர்ந்த இவர், 2018-ம் ஆண்டு துறைத்தேர்வு எழுதி குரூப்-பி அலுவலராகபதவி உயர்வு பெற்று தென்மண்டல தபால்துறைத்தலைவர் அலுவலகத்தில் உதவி இயக்குனராக பணியாற்றி வந்தார்.

இவர் கடந்த சில தினங்களுக்கு முன்னதாக தனது சொந்த ஊரான திருச்சிக்கு பணியிட மாற்றம் செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. இவருக்கு தென்மண்டல தபால்துறை தலைவர், இயக்குனர், மற்றும் மதுரை உள்ளிட்ட தென்மாவட்டங்களை சேர்ந்த தபால்துறை அலுவலர்கள், பணியாளர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

## செங்கல்பட்டு மாவட்டம் கூடுவாஞ்சேரி அருகே
## மூதாட்டி கொலை வழக்கில் ஆட்டோ டிரைவர் கைது



செங்கல்பட்டு ஜூலை.02-

கூடுவாஞ்சேரி அருகே மூதாட்டி கொலை வழக்கில் ஆட்டோ டிரைவர் கைது செய்யப்பட்டார். கொடுத்த கடனை திருப்பி தருவதாக அழைத்து சென்று கொன்றது அம்பலம் ஆனது.

செங்கல்பட்டு மாவட்டம், கூடுவாஞ்சேரி அடுத்த காரணை புதுச்சேரி பெரியார் நகர், 13-வது தெருவை சேர்ந்தவர் லட்சுமி (70). இவர் பக்கத்து தெருவில் உள்ள முத்து மாரியம்மன் கோவிலுக்கு சென்று திரும்பும் போது அதே பகுதியை சேர்ந்த ஆட்டோ டிரைவர் ஆறுமுகம் (52). லட்சுமியை வீட்டில் விடுவதாக கூறி அழைத்து சென்றுள்ளார். அதன்பிறகு லட்சுமியை காணவில்லை என அவரது கணவர் வேடசாமி கூடுவாஞ்சேரி போலீஸ் நிலையத்தில் புகார் அளித்திருந்தார்.

மாயமான லட்சுமியை போலீசார் தேடி வந்த நிலையில், ஆப்பூர் அருகே உள்ள அரசு காப்பு காட்டில் லட்சுமி கழுத்தில் கத்தியால் குத்தியும், தலையில் பலத்த காயங்களுடன் பிணமாக மீட்கப்பட்டார். இதையடுத்து தலைமறைவாக இருந்த ஆட்டோ டிரைவர் ஆறுமுகத்தை போலீசார் கைது செய்தனர். அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில் அவர் கூறியதாவது, கடந்த ஒரு ஆண்டுக்கு முன்பு லட்சுமியிடம் ரூ.70 ஆயிரம் கடனாக வாங்கினேன்.

பணத்தை திருப்பி தர கால தாமதமானதால் தன்னுடைய வீட்டுக்கு வந்து தகராறில் ஈடுபட்டார். இதனால் தான் அவமானம் அடைந்த நிலையில் அவரை கொலை செய்ய திட்டமிட்டேன். சம்பவத்தன்று கோவிலுக்கு சென்று வீடு திரும்பிய லட்சுமியிடம் தங்களுக்கு தர வேண்டிய பணத்தை வேறு ஒருவரிடம் இருந்து வாங்கி தருவதாக கூறி அழைத்துச் சென்றேன்.

ஆம்பூர் அருகே உள்ள காப்புக்காட்டில் கத்தியால் குத்தியும், தலையில் கட்டையால் அடித்தும் கொலை செய்தேன் என கூறினார். இதையடுத்து போலீசார் ஆறுமுகத்தை கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

## ஆலங்குடி அரசு மருத்துவமனையில் தேசிய மருத்துவர் தின கொண்டாட்டம்



ஆலங்குடி ஜூலை.02-

ஆலங்குடி அரசு மருத்துவமனையில் தேசிய மருத்துவர் தினம் கொண்டாடப்பட்டது. இதற்கு தலைமை மருத்துவர் பெரியசாமி தலைமை வகித்தார்.

செவிலியர் கண்காணிப்பாளர் ஜெயந்தி வரவேற்றார். மருத்துவர் சாந்தினி முன்னிலைவகித்தார். இதில் மருத்துவர்கள், கார்த்திக்குமார், மணி வண்ணன், கீதா மருத்துவமனை செவிலியர்கள் செல்வமணி, சிரேகா, கீதா, விண்ணரசி, ஜான், மருந்தாளுநர்கள் சிரைச்செல்வன், சிவசங்கரி அலுவலக எழுத்தர் சக்கரவர்த்தி மற்றும் அனைத்து ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

இதில் கொரோனா காலத்தில் சிறப்பாக பணிபுரிந்த மருத்துவர்களுக்கு நினைவுப்பரிசும், பாராட்டு சான்றிதழும் வழங்கப்பட்டது.

பின்பு தனது தலைமை உரையில் மருத்துவர் பெரியசாமி தேசிய மருத்துவர் தினம் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை முதல் நாள் கொண்டாடப்படுகிறது. இது டாக்டர் பி.சி.ராய் பிறந்த நாளை குறிப்பதாகும். இந்நாள் தன்னலம் கருதாமல் மருத்துவ சேவை செய்யும் மருத்துவர்கள் மற்றும் மக்களின் முன்னேற்றத்திற்கு அரும் பணியாற்றும் மருத்துவர்களை சிறப்பிக்கும் நாளாக கொண்டாடப்படுகிறது,

மருத்துவம் என்பது மருத்துவர், செவிலியர் மற்றும் மருத்துவமனை பணியாளர்களின் கூட்டுமுயற்சி, அதை நாம் சிறப்பான முறையில் செய்ய வேண்டும் என்று கூறினார். மருத்துவர்கள் கடந்த இரண்டு ஆண்டுகளாக கொரோனா காலத்தில் ஆற்றிய சேவை மிகவும் போற்றுதலுக்குரியது. அக்காலத்தில் பல மருத்துவர்களை கொரோனா பாதிப்பால் இழந்திருக்கிறோம். அவர்களுக்கு இந்நாளில் மரியாதை செலுத்துவோம். மருத்துவர்களின் பணி சிறக்க வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார். முடிவில் மருத்துவர் லிபர்த்தி நன்றி கூறினார்.

## அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் காது கேளாதோர் சங்கம் சார்பில் காத்திருப்புப் போராட்டம்



அரியலூர் ஜூலை.02-

காது கேளாதோர் சங்கம் சார்பில் அரியலூர் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் காத்திருப்பு போராட்டம் நடத்தி, கோரிக்கை மனு கொடுக்கப்பட்டுள்ளது.

அரியலூர் மாவட்ட காது கேளாதோர் சங்கம் சார்பில், அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு, சங்கத்தின் மாவட்ட தலைவர் சின்னப்பன் தலைமையில், காத்திருப்பு போராட்டம் நடைபெற்றது.

80 சதவீதத்திற்கு மேல் காது கேளாமை உள்ளவர்களுக்கு, டிஎன்பிஎஸ்சி குரூப்- 4 தேர்வில்,தேர்வு இல்லாமல் வேலைவாய்ப்பு வரிசை அடிப்படையில், அரசுத்துறையில் ஒரு சதவீதம் வேலைவாய்ப்பு வழங்க வேண்டும். மாத உதவித்தொகையை, வருவாய்துறைக்குபதிலாக, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலமாக மாற்றி, 3000 ரூபாயாக உயர்த்தி தர வேண்டும்.

காதுகேளாதோருக்கு, ஆவின் பாலகம் அமைத்து தருவது குறித்து பரிசீலிக்க வேண்டும். தமிழ்நாடு காது கேளாதோர் கூட்டமைப்பு சார்பாக, மாநில நல வாரியத்தில் பிரதிநிதிகளை நியமனம் செய்ய வேண்டும். அனைத்து அரசு அலுவலகங்களிலும், கல்வி நிறுவனங்களிலும், சைகை மொழியை அமல்படுத்தி அரசாணை வெளியிட வேண்டும். உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி காத்திருப்பு போராட்டம்நடைபெற்றது.

அதை தொடர்ந்து மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை மனு கொடுக்கப்பட்டது. இதில் சங்க செயலாளர் கார்த்திகேயன், துணைச் செயலாளர் அந்தோணி, பொருளாளர் துரைராஜ், செயற்குழு உறுப்பினர்கள் வெங்கடேசன், சபரி, விக்னேஷ், சுரேஷ், ராஜேஷ், செயற்குழு உறுப்பினர் வைஷ்ணவி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## வேப்பனப்பள்ளி அருகே சாலையோர மரத்தில் வேன் மோதிய விபத்தில் பெண் பலி : 7 பேர் படுகாயம்



கிருஷ்ணகிரி ஜூலை.02-

வேப்பனப்பள்ளி அருகே சாலையோர மரத்தில் வேன் மோதிய விபத்தில் பெண் உயிரிழந்தார். மேலும் 7 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம். வேப்பனப்பள்ளி அருகே உள்ள ஐப்பிகானப்பள்ளி கிராமத்தில் இருந்து நேற்று காலை வேன் ஒன்று கான்கிரீட் பணிக்காக அப்பகுதியில் உள்ள 8 பேரை ஏற்றிக் கொண்டு வந்து கொண்டிருந்தது. அப்போது வேப்பனப்பள்ளி நோக்கி வந்து கொண்டிருந்த போது சின்னகொத்தூர் அருகே சாலையில் அதிவேகமாக வந்த வேன் நிலை தடுமாறி மரத்தின் மீது பலமாக மோதியுள்ளது.

இந்த விபத்தில் சம்பவ இடத்திலேயே ஐப்பிகானபள்ளி கிராமத்தைச் சேர்ந்த முருகேசன் மனைவி மங்கம்மா (40) என்பவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார். மேலும் வேனில் இருந்த 7 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். அவர்களை அப்பகுதியினர் மீட்டு சிகிச்சைக்காக ஆம்புலன்ஸ் மூலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் சம்பவ இடத்திற்கு வந்த போலீசார் உயிரிழந்த பெண்ணின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## சோழவந்தான் அருகே சிறையிலிருந்து ஜாமீனில் வெளிவந்த ரவுடி சில மணி நேரத்திலேயே வெட்டி கொலை



மதுரை ஜூலை.02-

கொலை வழக்கில் மதுரை சிறையிலிருந்த பிரபல ரடிவு ஜாமீனில் வெளியே வந்த சில மணி நேரங்களில் பழிக்குப்பழியாக கொலை செய்த கும்பலால் மதுரையில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

மதுரை மாவட்டம், திருமங்கலம் பகுதியை சேர்ந்தவர் பிரபல ரவுடி குண்டார் (எ) சக்திவேல் (35). இவர் மீது கொலை, கொள்ளை, வழிப்பறி உள்ளிட்ட பல்வேறு வழக்குகள் உள்ள நிலையில் திண்டுக்கல் மாவட்டத்தில் நடைபெற்ற ஒரு கொலை வழக்கில் 2021 நவம்பர் மாதம் கைதாகி மதுரை மத்திய சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்தார். இந்நிலையில் நேற்று முன்தினம் மதியம் 3.30 மணிக்கு ஜாமீனில் வெளியே வந்த சக்திவேல், தனது இரு சக்கர வாகனத்தில் சோழவந்தான் அருகே சென்று கொண்டிருந்த போது அவரை பின் தொடர்ந்த மர்ம கும்பல் அவரை வழிமறித்து கத்தி, அரிவாள் உள்ளிட்ட பயங்கர ஆயுதங்களால் மாலை 5.30 மணிக்கு சரமாரியாக வெட்டி படுகொலை செய்து விட்டு தப்பியோடியுள்ளது.

இதனையடுத்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற காடுபட்டி போலீசார், கொலை செய்யப்பட்ட சக்திவேல் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர். போலீசாரின் முதற்கட்ட விசாரணையில் கொலை செய்யப்பட்ட சக்திவேல் மூன்றுக்கும் மேற்பட்ட கொலை வழக்குகளில் தொடர்புடையவர் என்றும், இவரால் கொலை செய்யப்பட்ட அல்லது பாதிக்கப்பட்ட ஏதோ ஒரு கும்பல் பழிக்கு பழியாக பழிவாங்க தற்போது இவரை கொலை செய்துவிட்டு தப்பியிருக்கலாம் என்றும் தெரியவந்துள்ளதாக கூறுகின்றனர்.

இந்நிலையில் கொலை செய்து விட்டு தப்பிச் சென்ற மர்ம நபர்களை பிடிக்க மாவட்ட எஸ்.பி சிவபிரசாத் உத்தரவின் பேரில், 2 தனிப்படைகள் அமைத்து சிசிடிவி காட்சிகளை கைப்பற்றி விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## தேசிய மருத்துவர்கள் தினத்தை முன்னிட்டு தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரத்த தான முகாம்



தஞ்சை ஜூலை.02-

தேசிய மருத்துவர் தினமாக ஆண்டுதோறும் ஜூலை மாதம் 1ஆம் தேதி கடைபிடிக்கப்படுகிறது. இந்நாளை முன்னிட்டு மருத்துவர்கள் பல்வேறு விழிப்புணர்வு மற்றும் சேவை நடவடிக்கைகளை செய்து வருகின்றனர். அதேபோல் தஞ்சாவூரில், மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இந்திய மருத்துவ சங்கம்,தஞ்சாவூர் கிளை சார்பில் ரத்ததான முகாமை நடத்தினர்.

இம்முகாமினை மாவட்ட ஆட்சியர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் தொடங்கி வைத்தார். இதில் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பணியாற்றும் மருத்துவர்கள் பலர் ரத்த தானம் வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் மருத்துவக் கல்லூரி முதல்வர் ரவிக்குமார், இந்திய மருத்துவ சங்க தலைவர் பாரதி, செயலாளர் கார்த்திகேயன், பொருளாளர் பாலமுருகன், ராதிகா, மைக்கேல், செல்வம், ரித்திஷ், ராஜ்மோகன், ரேகா உள்ளிட்ட மருத்துவர்கள் கலந்து கொண்டனர்.

# திருவள்ளூர் அருகே பரிபூரணம் நினைவு நாள் திருவுருவ படத்திறப்பு விழா

## திருமாவளவன் திறந்து வைத்தார்



திருவள்ளூர் , ஜூலை. 2

திருவள்ளூர் அடுத்த மணவாளநகர் பகுதியில்புத்தர் உடற்பயிற்சி கூடத்தின் நிறுவனர் மற்றும் முன்னாள் சிறுவர் எழுச்சி மன்ற மாநில செயலாளருமான சீனிவாசன் தாயார் பரிபூரணம் நினைவு நாள் திருவுருவ படத்திறப்பு விழாவிற்கு வருகை தந்த விடுதலை சிறுத்தை கட்சியின் தலைவர் தொல் திருமாவளவன் படத்திறப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு திருஉருவ படத்தை மலர் தூவி திறந்து வைத்தார்,

பின்னர் செய்தியாளர்கள் சந்தித்த அவர் கூறுகையில் திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி அடுத்து தோக்கமூர் பகுதியில் தலித் மக்களுக்கு எதிரான செயல்பாடுகளை மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அதிகாரிகள் தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் இது எந்த அரசுக்கு களங்கம் விளைவிக்கும் நிகழ்வாக இருக்கிறது ஆகவே தமிழக அரசு உடனடியாக இதில் தலையிட வேண்டும் அந்த சர்ச்சைக்குரிய சுவரை அப்புறப்படுத்த வேண்டும் என்று விடுதலை சிறுத்தை கட்சியின் சார்பில் வலியுறுத்தினார்.


மேலும் நடைபெறவுள்ள குடியரசு தலைவர் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் சார்பில் பொது வேட்பாளராக யஷ்வந்த் சின்கா அவர்கள் நிறுத்தப்பட்டு இருப்பதாகவும் விடுதலை சிறுத்தைகள் யஷ்வந்த் சின்காக்கு முழு ஆதரவு அளிக்கப்படும் என்று அவர் கூறியுள்ளார் மற்றும் மணவாளநகர் அடுத்த மேல்நல்லாத்தூர் பகுதியில் அமைந்துள்ள கேட்டர்பில்லர் தனியார் நிறுவனம்மானது அங்குள்ள கிராமத்துக்கு சொந்தமான குளத்தை சுற்றி வளைத்து வேலி அமைத்து இருக்கிறது அந்த தீண்டாமை சுற்று சுவரை உடனடியாக அகற்ற வேண்டும் என்று அவர் வலியுறுத்தி பேசினார் .

# நபிகள் நாயகம் குறித்த கருத்துக்கு நுபுர் ஷர்மா ஒட்டுமொத்த நாட்டிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் – உச்சநீதிமன்றம்

டெல்லி , ஜூலை. 2

நுபுர் சர்மா நாட்டையே தீக்கிரையாக்கிவிட்டார் , உதய்பூரில் டெய்லர் கொல்லப்பட்டது நுபுர் சர்மாவின் பேச்சால்தான் டிவியில் தோன்றி நாட்டு மக்களிடம் நுபுர் சர்மா மன்னிப்பு கேட்க வேண்டும்.

" நுபுர் சர்மாவுக்கு அச்சுறுத்தலா அல்லது அவரால் நாட்டுக்கு அச்சுறுத்தலா?" .ஒரு கட்சியின் செய்தித் தொடர்பாளர் என்றால், நீங்கள் இதுபோல்



எது வேண்டு மானாலும் சொல்வதற்கு லைசன்ஸ் இல்லை, நாட்டில் தற்போது நடப்பதற்கு இந்த பெண்மணியே பொறுப்பு - நுபுர் சர்மா வழக்கில் உச்ச நீதிமன்றம் சாட்டை அடி கருத்து

# திருமருகல் அருகே தி.மு.க. தெருமுனை பிரச்சார கூட்டம்



**நாகப்பட்டினம், ஜூலை.2–**

நாகை தெற்கு மாவட்டம் திருமருகல் தெற்கு ஒன்றியத்தின் சார்பில் வடகரையில் கருணாநிதி பிறந்தநாளையொட்டி தி.மு.க. தெருமுனை பிரசார கூட்டம் நடைப்பெற்றது. கூட்டத்திற்கு திருமுருகன் தெற்கு ஒன்றிய செயலாளர் சரவணன் தலைமை தாங்கினார்.

வடகரை ஊராட்சி மன்ற தலைவர் மோகன்,ஒன்றியக்குழு உறுப்பினர் சுல்தான் ஆரிப் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கிளைச் செயலாளர் முத்துகிருஷ்ணன் வரவேற்றார். இதில் மாவட்ட செயலாளர் கவுதமன்,தலைமை கழக பேச்சாளர் தூத்துக்குடி சரத் பாலா,மாவட்ட துணைச் செயலாளர் இளஞ்செழியன் ஆகியோர் கலந்துகொண்டு பேசினர். கூட்டத்தில் ஒன்றியக்குழு உறுப்பினர்கள் ஆரூர் மணிவண்ணன்,அபிநயா அருண்குமார்,மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் இளம்சுந்தர் மற்றும் மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள்,உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். முடிவில் கிளை செயலாளர் சிவஞானம் நன்றி கூறினார்.

### நேரடி நெல் விதைப்பு பிரச்சினை தொடர்பாக

# விவசாயிகள் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம்



மயிலாடுதுறை , ஜூலை. 2

மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் அருகே பருத்திகுடி கிராமத்தில் விவசாயிகள் நேரடி நெல் விதைப்பு செய்வது தொடர்பாக விவசாயக் கூலி தொழிலாளர்கள் வேலை இழக்ககூடும் என்ற காரணத்தால் கடந்த திங்கட்கிழமை அன்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் மற்றும் விவசாயக் கூலிதொழிலாளர்கள்வயலில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் போராட்டம் நடத்தியவர்களை போலீசார் கைது செய்து வழக்கு பதிவு செய்தனர். இதனிடையே நேற்று முன்தினம் 144 தடை உத்தரவு அப்பகுதியில் பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில் விவசாயிகள் காவல்துறை பாதுகாப்புடன் நேரடி நெல் விதைப்பு பணிகளை தொடங்கினர்.

இதனை தொடர்ந்து விவசாயிகள் நேரடி நெல் விதைப்பு செய்த போது வயலில் இறங்கி சேதப்படுத்தி போராட்டம் நடத்திய விவசாய கூலி தொழிலாளர்கள் மற்றும் போராட்டக்காரர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க கோரியும் , நேரடி நெல் விதைப்பு செய்ய அரசு தங்களுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்கிட வலியுறுத்தியும் நேற்று தமிழ்நாடு விவசாயிகள் நலச் சங்கத்தினர் மாவட்ட தலைவர் சேதுராமன் தலைமையில் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும் அரசு போராட்டக்காரர்களுக்கும், காவல்துறைக்கும் துணை போவதாகவும் ,சுதந்திரமாக நேரடி நெல் விதைப்பு செய்ய தங்களுக்கு பாதுகாப்புகோரியும் 300க்கும் மேற்பட்ட விவசாயிகள் மற்றும் பெண்கள் ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு கண்டன கோஷங்களை எழுப்பினர். தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குள் நுழைய முயன்ற விவசாயிகளை காவல்துறையினர் பேரிகார்டுகளை கொண்டு தடுத்து நிறுத்தினர்.



தமிழ்நாடு முதலமைச்சரின் ஆணையின்படி மயிலாடுதுறை தனியார் திருமண மண்டபத்தில் பள்ளிக்கல்வித்துறை சார்பாக நான் முதல்வன் திட்டத்தின் கீழ் கல்லூரி கனவு திட்ட 12ம் வகுப்பு மாணவர்களின் உயர்க்கல்வி வழிக்காட்டி விழிப்புணர்வு நிகழ்ச்சியில் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் இரா.லலிதா, மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம். பன்னீர்செல்வம், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜகுமார் ஆகியோர் பள்ளி மாணவர்களுக்கு வழிகாட்டி கையேடுகளை வழங்கும் பொது எடுத்தப்படம்.

அமிர்தம் ஸ்டோர்ஸ் A/C

♦ பாத்திரங்கள் ♦ பர்னிச்சர்ஸ் ♦ எலக்ட்ரானிக்ஸ் ♦ பிளாஸ்டிக்ஸ் ♦ பேக்ஸ்

கீழ 2ம் வீதி, புதுக்கோட்டை. போன் : 04322 290395

www.amirthamstores.co.in amirthammetals@gmail.com



உலக மருத்துவர் தினத்தை முன்னிட்டு புதுக்கோட்டை சிட்டி ரோட்டரி சங்க மருத்துவர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கும் வகையில் சங்கத் தலைவர் சிவக்குமார் தலைமையில், முன்னாள் தலைவர் மருத்துவர் மாரிமுத்து, மற்றும் துரை நாகரத்தினம் ஆகியோரை சந்தித்து இனிப்பு வழங்கி வாழ்த்து தெரிவித்தனர்.



திருவள்ளூர் நகராட்சி அலுவலகத்தில் நகர மன்ற மாதாந்திர கூட்டமானது தலைவர் உதய மலர் பொன். பாண்டியன் தலைமையில் நடைபெற்றது இதில் நகராட்சி ஆணையர் ராஜேஸ்வரி முன்னிலை வகித்தார் இக்கூட்டத்தில் திருவள்ளூர் நகராட்சிக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் மின் கம்பங்கள் மற்றும் நெடுஞ்சாலையில் உள்ள தூண்களில் கட்டப்பட்டுள்ள தனியார் கேபிள் டிவி ஒயர்கள் தொங்குவதால் ஏற்படும் விபத்துகளை தவிர்க்கவும் கம்பங்கள் சேதம் அடைவதை தவிர்க்கவும் கேபிள் வயர்களை அகற்றுதல் மற்றும் திருவள்ளூர் நகராட்சியில் உள்ள நவீன எரிவாயு தகன மேடை பழுதடைந்ததை சீரமைத்தல் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் திருவள்ளூர் நகர்மன்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.



திருவள்ளூர் அருகே கனகவல்லிபுரம் சேர்ந்த சமூக ஆர்வலர் மற்றும்ஊழியர் கிறிஸ்டோபர் பி.ஏ ஐந்தாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு விடையூர் இருளர் காலனி மக்களுக்கு மதிய உணவு புடவை குழந்தைகளுக்கு நோட்டு புத்தகம் மற்றும் நல திட்ட உதவிகள் குடும்பத்தின் சார்பாக வழங்கப்பட்டது



தேசிய மருத்துவர்கள் தினத்தை முன்னிட்டு 20 ஆண்டுக்கு மேலாக மக்கள் சேவை புரியும் டாக்டர் ஆர். ரவீந்திரன் மற்றும் டாக்டர் . தாமோதரனுக்கு சமூக சேவகர் எம். வெங்கடேசன் சால்வை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். இதில் எஸ்.லிங்கேஷ், சி. நீலகண்டன் மற்றும் ஆர்.சந்திரபோஸ் ஆகியோர் உடன் இருந்தனர்



புதுக்கோட்டை மாவட்டம் காரையூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளர் ரோந்து சென்ற போது TN 59 H 1566 என்ற மாருதி ஆம்னி வாகனத்தில் ஏற்றி வந்த 600கிலோ ரேஷன் அரிசியை கள்ள சந்தையில் விற்பனை செய்வதற்காக ஏற்றி வந்த நபர்கள் கடையக்குடி ராமன் மகன் சுகுமார், மற்றும் அன்னச்சத்திரம் சுந்தரம் மகன் ராமன் ஆகியோரை பிடித்து புதுக்கோட்டை குடிமை பொருள் வழங்கள் குற்றப் பலனாய்வுத் துறையில் உதவி ஆய்வாளரிடம் ஒப்படைக்கப்பட்டதையடுத்து மேற்கண்ட நபர்கள் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடைபெற்று வருகிறது.




நபிகள் நாயகத்தை பற்றி தவறாக பேசிய நூபுர் சர்மா, நவீன் ஜிண்டால்.. ஆகிய இருவர் மீதும் எந்த நடவடிக்கை எடுக்காமல் இருக்கும் பாஜக அரசை கண்டித்தும், கைது செய்யக் கோரியும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம், சென்னை பேசன்பிரிட்ஜ் மூலகொத்தலம் சாலையில் வடசென்னை அனைத்து பள்ளிவாசல்கள் மற்றும் இஸ்லாமிய இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பில் உடனடியாக கைது செய்ய வலியுறுத்தி முற்றுகை போராட்டம் நேற்று மதியம் நடைபெற்றது. இதில் ஆயிரகனகான இஸ்லாமியர்கள் கலந்து கொண்டனர்.

# சீர்காழி சுற்றுவட்டாரம் முழுவதும் காற்றுடன் கூடிய கனமழை, வானவில் தோன்றியதால் பொதுமக்கள் ஆர்வத்துடன் பார்த்தனர்



சீர்காழி, ஜூலை. 2

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் காலை முதல் வெயில் வாட்டி வதைத்து வந்த நிலையில் மாலை திடீர்னு மேகமூட்டத்துடன் தொடர்ந்து சாரல் மழையாக துவங்கிய மழை பின்னர் பலத்த காற்றுடன் கூடிய இடியுடன் கூடிய கனமழை பெய்தது. மழையின் போது பலத்த காற்று வீசியதால் சாலை ஓரத்தில் இருந்த மரங்கள் முறிந்து கீழே விழுந்தன.

இதனால் பல்வேறு இடங்களில் சுமார் அரை மணி நேரத்திற்கு மேலாக மின்சாரம் துண்டிக்கப்பட்டது.மேலும் திடிர் மழையால் வானத்தில் வானவில் தோன்றியததால் பள்ளி மாணவர்கள், பெற்றோர்கள் ஆர்வத்துடன் பார்த்தனர், சீர்காழி, வைத்தீஸ்வரன்கோவில், கொள்ளிடம்,பூம்புகார் உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதிகளிலும் வெப்பம் தணிந்து குளிர்ந்த சூழல் நிலவுவதால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்

# செங்குன்றம் நாரவாரிகுப்பம் பேரூராட்சி மாதாந்திரக் கூட்டம்



சென்னை , ஜூலை. 2

சென்னை மாதவரம் அடுத்த செங்குன்றம் தேர்வு நிலை பேரூராட்சி ஆலோசனை கூட்டம் பேரூராட்சி தலைவர் தமிழரசி குமார் தலைமை நடைபெற்றது. இதில் பேரூராட்சி துணைத் தலைவர் ஆர்.இ.ஆர்.விப்ரநாராயணன், செயல் அலுவலர் பாஸ்கரன் ஆகியோர் முன்னிலையில் நடந்தது.

இக்கூட்டத்தில் பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் குப்பைகள் அள்ளுவதற்கு மின்கலம் மூலம் இயங்கும் 8 வாகனம் பேரூராட்சிக்கு கொள்முதல் செய்து கொள்ள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மற்றும் தார்சாலை, பேவர் பிளாக் சாலை, போடுவதற்கும் கல்வெட்டுகள் அமைப்பதற்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டது.

இதில் பேரூராட்சி வார்டு கவுன்சர்கள் பப்பிதா பால்ராஜ், லதா கணேசன், என். சகாதேவன், எஸ். கார்த்திக் கோடீஸ்வரன்,தெய்வாணை, கபிலன், லீலாவதி சாந்தகுமார்,கே.ஆர். ரமேஷ், வினோதினி பாலாஜி , அமுதா ஆசைத்தம்பி , கோமதி பாஸ்கர், ஸ்ரீதேவி தேவராஜ், இலக்கியன், கலைவாணி பாபு, ராதாகிருஷ்ணன், இளங்கோவன் , கோதண்டராமன், தூய்மை ஆய்வாளர் மதியழகன் மற்றும் பேரூராட்சி அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

### பாதுகாப்பற்ற முறையில் உடைந்து விழும் நிலையில் தொடக்கப்பள்ளி

# மாற்று கட்டிடம் கட்டி தர மாவட்ட ஆட்சியரிடம் பொதுமக்கள் பிள்ளைகளுடன் மனு அளித்தனர்





**மயிலாடுதுறை , ஜூலை. 2**

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தாலுக்கா நெப்பத்தூர் கிராமத்தில் 150 வருட பழமையான தனியார் கட்டிடத்தில் ஸ்ரீ மீனாட்சி அரசு உதவி பெறும் தொடக்கப்பள்ளி இயங்கி வருகிறது. இங்கு பள்ளி நிர்வாகத்திற்கும் கட்டிட உரிமையாளர்களுக்கும் இடையே இடப்பிரச்சினை நிலவி வருவதால் பள்ளி கட்டிடத்தை சீரமைக்க முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து அப்பகுதிமக்கள்சிதிலமடைந்து அபாயகரமான நிலையிலுள்ள பள்ளி கட்டிடத்தை மாற்றக்கோரி போராட்டத்தில் ஈடுபட முயன்றபோது சீர்காழி வட்டாட்சியர் தலைமையில் அமைதி பேச்சு வார்த்தை நடைபெற்றது.

இதில் ஊராட்சி மன்ற நூலக கட்டிடத்தில் பள்ளி தற்காலிகமாக இயங்குவதற்கு ஏற்பாடு செய்வதாகவும் ஆறு மாத காலத்திற்குள் புதிய கட்டிடம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் உறுதியளிக்தப்பட்டது. பின்னர் இது குறித்து ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்களிடம் அனுமதி கோரி கேட்டபோது ஊராட்சி மன்றத்துக்கு சொந்தமான கட்டிடத்தை தனியார் பள்ளிக்கு வழங்க முடியாது எனக் கூறியுள்ளனர்.

இதனையடுத்து அப்பகுதி பொதுமக்கள் தங்கள் பிள்ளைகளுடன் நேற்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் முருகதாஸிடம் மனு கொடுத்தனர். மேலும் அபாயகரமான நிலையில் கல்வி பயிலும் மாணவர்களின் நிலையை கருத்தில் கொண்டு உடனடியாக பள்ளியை வேறு இடத்திற்கு மாற்ற கோரியும், தங்களது பகுதிக்கு அருகாமையிலேயே பள்ளி கட்டிடம் அமைய மாவட்ட ஆட்சியர் லலிதா நேரடியாக வந்து ஆய்வு மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவ்வப்போது கோரிக்கை விடுத்தனர்.

# 70 சதவீத மானியத்தில் சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள்

தி.மலை , ஜூலை. 2

திருவண்ணாமலை மாவட்டத்தில் 70 சதவீத மானியத்தில் சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் அமைக்க விவசாயிகள் விண்ணப்பிக்கலாம் என்று மாவட்ட கலெக்டர் பா.முருகேஷ் தெரிவித்துள்ளார். இது குறித்து செய்தி வெளியிட்டுள்ள குறிப்பில் கூறியிருப்பதாவது:-

தமிழக அரசு வேளாண்மை பொறியியல் துறையின் மூலம் முதல் அமைச்சரின் சூரிய சக்தி பம்பு செட்டுகள் திட்டத்தின் கீழ் மின் இணைப்பு இல்லாத பாசன ஆதாரம் உள்ள விவசாயிகளுக்கு 10 குதிரை திறன் வரையிலான மின் கட்டமைப்புடன் சாராத தனித்து சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் 70 சதவீத மானியத்தில் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின் கீழ் முதல் தவணையாக சூரிய சக்தியால் இயங்கும் 2000 பம்பு செட்டுகள் ரூ.43 கோடியே 55 லட்சத்து 60 ஆயிரம் மானியத்தில் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் ஏற்கனவே உள்ள பாசன ஆதாரத்தில் அல்லது கிணற்றில் டீசல் இன்ஜின் பயன்படுத்தி வரும் பட்சத்தில் அதற்கு மாறாக இத்திட்டத்தின் கீழ் சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகளை அமைத்துக் கொள்ளலாம்.தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் மூலம் இலவச மின் இணைப்பு கோரி ஏற்கனவே விண்ணப்பித்துள்ள விவசாயிகள் முன்னுரிமையை துறக்க வேண்டிய அவசியம் இல்லை.மேலும் பாசன நீரினை சிக்கனமாக பயன்படுத்தும் வகையில் இத்திட்டத்தின் கீழ் சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகளை அமைத்திட வேளாண்மை பொறியியல் துறை உபகோட்டங்களில் விண்ணப்பம் அளிக்கும்போது சூரிய சக்தியால் இயங்கும் பம்பு சக்திகளை நுண்ணீர் பாசன அமைப்புடன் இணைத்திட உறுதிமொழி அளித்திட வேண்டும்.

மேலும் விவரங்களை www.pmkusum.tn.gov.in என்ற இணையதளத்தில் இருந்தும் அறிந்து கொள்ளலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## பொன்னமராவதியில் பழமைவாய்ந்த அமரகண்டான் ஊரணியை சுற்றி நடைபாதை அமைக்க பொதுமக்கள் கோரிக்கை

பொன்னமராவதி, ஜூலை.2-




புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதியில் பழமைவாய்ந்த வரலாற்று சிறப்புமிக்க அமரகண்டான் ஊரணி உள்ளது. பல வருடங்களாக பொன்னமராவதி சுற்றுவட்டார பகுதி மக்கள் அமரகண்டான் ஊரணியை சுற்றி உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி குளத்தை சுற்றி நடைபாதை பூங்கா, பொன்னன் அமரன் வரலாற்றை நினைவுபடுத்தும் விதமாக மணிமண்டபம் ஏற்படுத்தித் தர வேண்டி சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் பல ஆண்டுகளாக கோரிக்கை வைத்தும் இதுவரையும் எந்த பயனும் இல்லை என்று மக்கள் வேதனையுடன் தெரிவித்தனர்.

இனி வரும் காலங்களிலாவது பல ஆண்டுகள் பொதுமக்களின் கோரிக்கையான நடைபாதை, பூங்கா, பொன்னன் அமரன் நினைவுத் தூண்கள் மணிமண்டபம் என பொன்னமராவதியின் வரலாற்றை பாதுகாக்கும் விதமாக அமைக்க வேண்டும் என அப்பகுதி பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கையை முன்வைத்தனர், இனிமேலாவது இத்துறை சார்ந்த அதிகாரிகள் கவனத்தில் கொண்டு உடனடியாக ஆக்கிரமிப்புகளை அகற்றி நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

## ஆவுடையார்கோவில் அருகே இரண்டு வயது பெண் குழந்தை நீரில் மூழ்கி உயிரிழப்பு

ஆவுடையார்கோவில், ஜூலை.2-

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் தாலுகா பலவரசன் ஊராட்சியில் உள்ள உதயமாணிக்கம் கிராமத்தைச் சேர்ந்த எட்வின் (40), குணசெல்வி (32) ஆகிய தம்பதியின் இரண்டு வயதான இரண்டாவதாக பிறந்த பெண் குழந்தை அஷ்ரா(2), நேற்று பிற்பகல் 11 மணி அளவில் அருகில் உள்ள தாமரை குளத்திற்கு விளையாடச் சென்று ஆளில்லாத நேரத்தில் மூழ்கி இறந்துள்ளது.



அங்கு குளிக்கச் சென்ற சிறுவர்களுக்கு தகவல் தெரியவே குழந்தையை ஆவுடையார் கோவில் அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றனர், அங்கு பரிசோதித்த மருத்துவர்கள் குழந்தை இறந்து விட்டதாக தகவல் தெரிவிக்கவே, குழந்தையை உதயமாணிக்கத்தில் அடக்கம் செய்துள்ளனர். தினக்கூலி வேலைசெய்யும் எட்வின் மற்றும் 70% ஊனமான நிலையில் உள்ள தாய் குணசெல்வி ஆகியோர் செய்வதறியாத துக்கத்தில் உள்ளனர், இந்தச் சம்பவம் கிராமத்தையே சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

## ஆலங்குடி அருகே அரசு தொடக்கப்பள்ளி மேம்பாட்டு பணிகளை அமைச்சர் ஆய்வு

ஆலங்குடி ஜூலை.02-

ஆலங்குடி அருகே வடகாடு ஊராட்சி, புள்ளாச்சிகுடியிருப்பு அரசுத் தொடக்கப் பள்ளியில் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆய்வு மேற்கொண்டார்.



புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி அருகேயுள்ள வடகாடு ஊராட்சி, புள்ளாச்சிகுடியருப்பு அரசு தொடக்கப்பள்ளியில் நடைபெற்றுவரும் மேம்பாட்டு பணிகளை விளையாட்டுத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் நேற்று ஆய்வு செய்தார்.

திருவரங்குளம் ஒன்றியம், வடகாடு ஊராட்சி புள்ளாச்சிகுசியிருப்பு அரசு தொடக்கப்பள்ளியில் சுற்றுச்சுவர் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேலும், பள்ளியை மேம்படுத்தும் வகையில் பொதுமக்கள் மற்றும் அரசின் பங்களிப்போடு குளிர்சாதன வசதி, ஸ்மார்ட் வகுப்பறை, கலையரங்கம் உள்ளிட்ட பணிகள் நடைபெற்று வருகிறது.

.பள்ளியில் நடைபெற்று வரும் பணிகளை விளையாட்டுத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆய்வு மேற்கொண்டார். அப்போது, சட்டப்பேரவை தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து பள்ளி வளாகத்தில் பேவர் பிளாக் தரைத்தளம் அமைத்துத்தருவதாக உறுதியளித்தார்.

ஆய்வின் போது, பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் சுரேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## தென்காசி மாவட்ட காது கேளாதோர் நல சங்கம் சார்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் வளாகத்தில் காத்திருப்பு போராட்டம்

தென்காசி ஜூலை.02-

தென்காசி மாவட்ட காது கேளாதோர் நல சங்கம் சார்பாக தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் வளாகத்தில் காத்திருப்பு போராட்டம் நடைபெற்றது. தமிழ்நாடு காது கேளாதோர் கூட்டமைப்பு சார்பில் கோரிக்கைகளை வலியுறுத்தி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்பு காத்திருப்பு போராட்டம் நடைபெற்றது.



வறுமைக் கோட்டின் கீழ் உள்ள எங்களுக்கு தொகுப்பு வீடு வழங்கிடவும், மாதாந்திர உதவித்தொகை ரூபாய் 3 ஆயிரத்தை வழங்கவும், ஆவின் பாலகம் அமைத்து தரவும், அனைத்து அரசு அலுவலகங்கள், கல்வி நிறுவனங்களில் சைகை மொழியை அமுல்படுத்தி அரசாணை வெளியிடவும், என 12 கோரிக்கைகளை வலியுறுத்தி மாற்றுத்திறனாளிகள் சங்கம் சார்பாக காத்திருப்பு போராட்டம் நடைபெற்றது.

தலைவர் முருகன், உப தலைவர் ஏசுதாசன் ராஜா, பொதுச் செயலாளர் முகமது லத்திப், பொருளாளர் சங்கர், உப தலைவி பஞ்சவர்ணம், செயற்குழு உறுப்பினர்கள் பொன்னுச்சாமி, முத்துக்குமார், கோபால், ராம்குமார், மற்றும் ஏராளமானோர் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.








▶ தென்காசி மாவட்டம், ஈஸ்வரன் பிள்ளை அரசு மாதிரி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நான் முதல்வன், கல்லூரி கனவு பனிரெண்டாம் வகுப்பு மாணவர்களுக்கான உயர்கல்வி வழிகாட்டு நிகழ்ச்சியில் பொறியியல், மருத்துவம், வேளாண்மை, கால்நடை மருத்துவம், கலை படிப்புகள், அறிவியல் படிப்புகள் மற்றும் ஊடகவியல் சார்ந்த படிப்புகள் என பல்வேறு படிப்புகளில் உள்ள உட்பிரிவுகளும் அவற்றிற்கான வேலை வாய்ப்புகளும் விளக்கப்பட்டன. மேலும் கல்லூரி கல்விக் கடன் பெறுவது எப்படி என்பதை பல முன்னணி கல்லூரி முதல்வர்கள் எடுத்துரைத்தனர். மேலும் இந்நிகழ்ச்சிக்கு தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் பி. ஆகாஷ் தலைமையில், முன்னிலை எஸ். பழனி நாடார் தென்காசி சட்டமன்ற உறுப்பினர், வரவேற்புரை கபீர் முதன்மை கல்வி அலுவலர் தென்காசி, ஈ.ராஜா சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர், டி. சதன் திருமலை குமார் வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர், தமிழ்ச்செல்வி போஸ் மாவட்ட பஞ்சாயத்து தலைவி தென்காசி, நன்றியுரை ஆர். சங்கீதா சின்ன ராணி மாவட்ட கல்வி அலுவலர் தென்காசி, மற்றும் கிராம, நகர் புறங்களில் இருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு பயன் பெற்று சென்றனர்.

## ஆலங்குடி செஞ்சிலுவை சங்கத்தின் பொதுக்குழு கூட்டம்



ஆலங்குடி ஜூலை.02 -

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி காமராஜர் சிலை அருகில் உள்ள தனியார் கட்டிடத்தில் செஞ்சிலுவை சங்கம் சார்பில் பொதுக்குழு கூட்டம் நேற்று நடைபெற்றது.

பொதுக்குழு கூட்டத்தில் புதிய பொறுப்பாளராக கௌரவ தலைவர் ஸ்டனிலாஸ், சேர்மன் முத்தையா, செயலாளர் முருகன், பொருளாளர் ஜெயச்சந்திரன், துணைத் தலைவர் முத்துராமன், துணை சேர்மன் முருகேசன், துணை செயலாளர் லட்சுமி நாராயணன் மற்றும் பொருளாளர் ஆகியோர் புதிய நிர்வாகக் குழு உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பாஸ்கரன், ஜெரால்டு, ஞானப்பிரகாசம், பாலாஜி, சரவணன், யோகேஸ்வரன், சரவணன், தர்மராஜ், அஞ்சலை, திருமூர்த்தி அனைவரும் ஒருமனதோடு தேர்ந்தெடுத்தனர். பொதுமக்களுக்கு சேவை செய்யும் மனப்பான்மையுடன் செஞ்சு சிலுவை சங்கம் சார்பில் உறுதிமொ ழி எடுத்துக்கொண்டனர்.



▶ மருத்துவர் தினத்தையொட்டி நேற்று புதுக்கோட்டை மருத்துவக்கல்லூரி முதல்வர் பூவதி தலைமையில் இருக்கை மருத்துவர் இந்துராணி முன்னிலையில் மருத்துவக்கல்லூரி மருத்துவ மாணவர்கள் பங்கேற்று 150 மரக்கன்றுகளைநடவுசெய்திருந்தனர். மரம் அறக்கட்டளையின் நிறுவனர் மரம்இராஜா இந்நிகழ்வுக்கான ஏற்பாடுகளை செய்திருந்தார்.

## ஆவுடையார் கோவில் பகுதியில் வீடு கட்ட இருபாடு கொண்ட மண் அடிப்பு தீவிரம்

ஆவுடையார்கோவில் ஜூன்.02-



புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார் கோவில் பகுதியில் கடந்த 10 ஆண்டுகளாக தாழ்வான பகுதிகளில் வீடு கட்டி குடியிருந்தோர் அவ்வப்போது பெய்த கனமழையால் தனது வீட்டை சுற்றி நீர் பிடிப்பு இருந்ததால் வீடுகளில் வசிப்போர் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகினர். மேலும் குழந்தைகள் மழை காலங்களில் வீட்டை சுற்றி தேங்கி நின்ற நீரினால் பல்வேறு தொற்று வியாதிகளுக்கு ஆட்பட்டனர்.

இந்நிலையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பள்ளமான பகுதிகளில் வீடு கட்டி வசிப்போர் தனது வீட்டை சுற்றி இருபாடு கொண்ட மண்களை அடித்து உயரமாக்கிகொள்ளலாம். என்றும் அதற்காக தாலுகா அலுவலகத்தில் குறிப்பிட்ட நிபந்தனைகளுடன் பதிவு செய்து அனுமதி பெற்ற பின்னரே இருபாட்டு மண் அடித்துக் கொள்ளலாம் என்றும் ஆணை பிறப்பித்து இருந்தார்.

இந்நிலையில் ஆவுடையார் கோவில், புன்னிய வயல் மற்றும் ஒக்கூர் போன்ற பகுதிகளில் இப்பொழுது தனது வீடுகளை சுற்றி இருபாடு மண்ணை அடித்து மேடாக்கும் வேலையில் சிலர் ஈடுபட்டுள்ளனர்.

## பொன்னமராவதி தாலுகாவில் பணிபுரியும் கிராம நிர்வாக அலுவலர்களை பணி இட மாறுதல் செய்து இலுப்பூர் வருவாய் கோட்ட அலுவலர் உத்தரவு

பொன்னமராவதி ஜூலை.02-

புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வருவாய் கோட்ட அலுவலர் குழந்தைசாமி உத்தரவுக்கு இணங்க, புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வருவாய் கோட்டம், பொன்னமராவதி தாலுகா "அ"பிரிவு கிராமங்கள் மற்றும் "ஆ" பிரிவு கிராமங்களில் முறையே ஓராண்டு மற்றும் மூன்று ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்த கிராம நிர்வாக அலுவலர்களுக்கு 01.07.22 தகுதி நாளாகக் கொண்டு 2022 ஆம் ஆண்டுக்கான நேரடி கலந்தாய்வு நடத்தப்பட்டது. அதில் பணியிட மாறுதல் மற்றும் பணி நியமனம் செய்து ஆணையிடப்பட்டது.

இதன்படி பொன்னமராவதி தாலுகாவில் தற்போது பணிபுரிந்து வரும் கிராம நிர்வாக அலுவலர்கள் முறையே ஏ.ஆரோக்கியராஜ் வார்ப்பட்டு கிராமத்திலிருந்து மேலத் தாணியத்திற்கும், ஆர்.விஜயா தூத்தூர் வட்டத்திலிருந்து வார்ப்பட்டு வட்டத்திற்கும், எஸ். ராஜேஸ்வரி ஒளியமங்கலம் வட்டத்தில் இருந்து பொன் மேற்கு வட்டத்திற்கும், சி.ராஜேந்திரன் திருக்களம்பூர் வட்டத்திலிருந்து தூத்தூர் வட்டத்திற்கும், எம். பச்சையப்பன் இடையாத்தூர் வட்டத்திலிருந்து ஒலியமங்கலம் வட்டத்திற்கும், சாகுல் ஹமீது சுந்தரம் வட்டத்திலிருந்து திருக்களம்பூர் வட்டத்திற்கும் சண்முகசுந்தரம் வாழைக்குறிச்சி வட்டத்திலிருந்து சுந்தரம் வட்டத்திற்கும், பார்த்திபன் மேலத்தாணியம் வட்டத்திலிருந்து இடையாத்தூர் வட்டத்திற்கும், வை. முருகேசன் செவலூர் வட்டத்திலிருந்து வாழைக்குறிச்சி வட்டத்திற்கும் பணியிட மாறுதல் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும் இந்த உத்தரவு உடனடியாக அமலுக்கு வருவதாக அந்த ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 2005-ல் தஞ்சை அருங்காட்சியகத்தில் மாயமான முதல் தமிழ் பைபிள் லண்டனில் கண்டுபிடிப்பு

தஞ்சை ஜூலை.02-



தஞ்சை அருங்காட்சியகத்தில் இருந்து 2005-ல் மாயமான தமிழில் முதன் முதலில் மொழிபெயர்த்து அச்சிடப்பட்ட சிறப்புக்குரிய பைபிள் லண்டனில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. அதை தமிழகம் கொண்டுவர சிலை கடத்தல் தடுப்பு பிரிவு போலீசார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

தஞ்சை சரஸ்வதி மஹால் நூலகம் சுமார் 400 ஆண்டுகள் பழமையானது. இங்குள்ள அருங்காட்சியகத்தில் பல்வேறு சிறப்பு வாய்ந்த புத்தகங்கள், ஓலைச் சுவடிகள், காகித சுவடிகள் உள்ளன. இதில் 17-ம் நூற்றாண்டைச் சேர்ந்த சீகன்பால் என்பவர் முதன்முதலாக தமிழில் மொழிபெயர்த்த புதிய ஏற்பாடு பைபிள் தரங்கம்பாடியில் அச்சிடப்பட்ட முதல் தமிழ் நூல் இந்த அருங்காட்சியகத்தில் வைத்து பாதுகாக்கப்பட்டது.

இந்நிலையில் கடந்த 2005 ஆம் ஆண்டு திடீரென இந்த பைபிள் மாயமானது. தஞ்சை மேற்கு காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு பைபிளை தேடும் பணி நடந்து வந்தது. இதைத் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வந்த நிலையில், லண்டனில் இந்த புதிய ஏற்பாடு பைபிள் இருப்பதாக சிலை கடத்தல் தடுப்பு பிரிவு போலீசாருக்கு தகவல் கிடைத்தது. அதன்பேரில் சிலை கடத்தல் தடுப்பு பிரிவு போலீசார் லண்டனுக்கு விரைந்து சென்று மாயமான பைபிள் இருப்பதை உறுதிப்படுத்தினர். இதைத் தொடர்ந்து யுனெஸ்கோ ஒப்பந்தத்தின் மூலம் பைபிளை தமிழகத்திற்கு கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். பைபிள் மீட்கப்பட்ட பிறகு தஞ்சைக்கு கொண்டு வரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஆலங்குடி அருகே அரசு பள்ளியில் மடிக்கணினி பொருட்கள் திருட்டு

ஆலங்குடி ஜூலை.02-

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தாலுகா, திருவரங்குளம் ஒன்றியத்துக்கு உட்பட்ட குப்பகுடி ஊராட்சி கல்யாணபுரம் கிராமத்தில் அரசு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி உள்ளது. பள்ளியில் 137 மாணவ மாணவிகள் பயின்று வருகின்றனர்.



வழக்கம்போல் நேற்று காலை 9 மணி அளவில் பள்ளி ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர் ஆகியோர் பள்ளியின் கதவு திறக்க வந்தபோது கதவு பூட்டு உடைத்திருந்ததை பார்த்து அதிர்ச்சியடைந்தனர். இது குறித்து உடனடியாக ஆலங்குடி போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர் விரைந்து வந்த போலீசார் ஆய்வு மேற்கொண்டனர். மேலும் அரசு பள்ளியின் பூட்டை உடைத்து அடுத்தடுத்து 4 மடிக்கணினி உள்ளிட்ட பொருட்கள் கொள்ளையடிக்கபட்டு வரும் சம்பவம் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து பள்ளியின் தலைமை ஆசிரியர் ஏற்கனவே காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ள நிலையில் குற்றவாளிகளை உடனே கைது செய்ய வேண்டும் என பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்நிலையில் பள்ளியின் அலுவலக அறையின் பூட்டை உடைத்து இரு மடிக்கணினிகள் நேற்று முன்தினம் இரவு மர்ம நபர்கள் சிலர் திருடி சென்றுள்ளனர்.

ஏற்கனவே 2017, 2020 ஆண்டுகளில் திருடு போனது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்துள்ளதாக கூறப்படுகிறது. மேலும் இரண்டு மடிக்கணினிகள், டிவிடி பிளேயர் ஒலிபெருக்கி உள்ளிட்ட பொருட்கள் அப்பள்ளியில் திருடு போன நிலையில் மர்ம நபர்கள் பூட்டை உடைத்து திருடி உள்ள சம்பவம் அப்பள்ளியின் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் மத்தியில் அச்சத்தையும் அதிர்ச்சியும் ஏற்படுத்தியுள்ளது. மேலும் நேற்று முன்தினம் இரவு திருடப்பட்ட கணினி பொருட்களான சுமார் 3.50 லட்சம் மதிப்பு இருக்கும் என்று கூறப்படுகிறது.

கல்யாணபுரம் கிராம மக்கள், எஸ்எம்சி பெற்றோர்கள் மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் ஆகியோர் பள்ளியில் திருடு போனது சம்பந்தமாக கண்டுபிடிக்க வேண்டுமென திரண்டனர். பள்ளியின் வளாகத்தில் அமர்ந்த ஆசிரியர்கள் அனைவரும் ஆலங்குடி போலீசில் பொதுமக்களுடன் திரண்டு வந்து புகார் மனு கொடுத்தனர். மேலும் இச்சம்பவத்தில் ஈடுபட்ட கொள்ளையர்களை உடனடியாக கைது செய்ய வேண்டும் எனவும் பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். புகாரின் பேரில் புதுக்கோட்டை தடயவியல் நிபுணர்கள் விரைந்து வந்து பள்ளியில் திருட்டு போன இடங்களில் ஆய்வில் ஈடுபட்டனர். பள்ளியில் திருடு போனதால் பொதுமக்கள் மத்தியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

## தூத்துக்குடி வ.உ.சி. துறைமுகத்தில் கடலில் மூழ்கி கப்பல் கீழ் பகுதியை சுத்தம் செய்த தொழிலாளி பலி

தூத்துக்குடி ஜூலை.02-

தூத்துக்குடி வ.உ.சி. துறைமுகத்தில் கடலில் மூழ்கி கப்பல் கீழ் பகுதியை சுத்தம் செய்த தொழிலாளி மூச்சுத்திணறி பரிதாபமாக உயிரிழந்துள்ளார். அவருக்கு உரிய உபகரணம் வழங்கவில்லை என கூறி உறவினர்கள் போராட்டம் நடத்தியதால் பரபரப்பு ஏற்பட்டது.

தூத்துக்குடி வ.உ.சி. துறைமுகத்துக்கு ஸ்டார்க் என்ற கப்பல் வந்தது. இந்த கப்பலின் புரப்பல்லரில் மீன்பிடி வலை, கயிறு போன்றவை சிக்கி இருந்ததாக கூறப்படுகிறது. இது போன்று புரப்பல்லரில் சிக்கும் கழிவுகளை சுத்தம் செய்வதற்காக தனியார் நிறுவனம் தூத்துக்குடியில் இயங்கி வருகிறது. அந்த நிறுவனத்தை கப்பல் நிர்வாகத்தினர் அணுகி உள்ளனர். அந்த தனியார் நிறுவனத்தினர் டைவிங் பயிற்சி முடித்து உள்ள தூத்துக்குடி அண்ணா நகர் 8-வது தெருவை சேர்ந்த தங்கராஜ் மகன் சாம்ராஜ் (27) என்பவரை பணிக்காக அழைத்து சென்றுள்ளனர். சாம்ராஜ், கண்ணன் ஆகிய 2 பேர் ஆக்சிஜன் சிலிண்டர் உதவியுடன் கடல் தண்ணீருக்குள் மூழ்கி சென்று கப்பல் புரப்பல்லரில் சிக்கி இருந்த வலை, கயிறு போன்றவற்றை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டனர். அப்போது, எதிர்பாராதவிதமாக சாம்ராஜ் மூச்சுத்திணறி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.



இதுகுறித்து தகவல் அறிந்த தூத்துக்குடி தருவைகுளம் கடலோர பாதுகாப்பு போலீசார் சம்பவஇடத்திற்குசென்று அவரதுஉடலைகைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இது தொடர்பாக இன்ஸ்பெக்டர் சைரஸ், சப்-இன்ஸ்பெக்டர் ரென்னிஸ் ஆகியோர் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் சாம்ராஜின் உடல் பிரேத பரிசோதனைக்காக தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அருகே கொண்டுசெல்லப்பட்டது. அப்போது, சாம்ராஜின் உறவினர்கள் மருத்துவமனை பிரேத பரிசோதனை அறை அருகே திரண்டனர். அவர்கள் முறையாக பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் ஆக்சிஜன் சிலிண்டர் வைக்காமலும், பாதுகாப்பு விதிகளை பின்பற்றாததாலும் சாம்ராஜ் இறந்து உள்ளார் என்று குற்றம் சாட்டினர். தொடர்ந்து சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி போராட்டம் நடத்தினர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. இதனை தொடர்ந்து போலீசார் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது பிரேத பரிசோதனை அறிக்கை அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து அவர்கள் போராட்டத்தை கைவிட்டனர்.


Owned & Published by **S.Sivasakthivel**, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: **K.selvaraj** Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: **S.Sivasakthivel**. Phone:04322-261577.
**Chennai Office: Chief Reporter S.Kadar Hussain,** ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com



# அதிகரிக்கும் கொரோனா முதல்வர் ஆலோசனை அமைச்சர் எச்சரிக்கை

# ஆலங்குடி அருகே அரசு சொந்தமான மடிக்கணினிகள் திருட்டு





# சுதந்திர, குடியரசு தினத்தை போல் தான் ஜிஎஸ்டி நாளும்


சென்னை / புதுக்கோட்டை | 02.07.2022 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை
வரலாறு
நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

**டி. வி. தாமஸ்** , இந்திய இடதுசாரி அரசியல்வாதி (பி.1910) (இ.1977)



**ஓ. வே. விஜயன்** , மலையாள எழுத்தாளர் (பி.1930) (இ.2005)



**எம். ஏ. குலசீலநாதன்** , ஈழத்து கருநாடக, மெல்லிசைப் பாடகர், வானொலிக் கலைஞர் (பி.1940) (இ.2004)



**மயில்சாமி அண்ணாதுரை** , தமிழகப் பொறியலாளர், விண்வெளி ஆய்வாளர் (பி.1958)



## இன்றைய நினைவு நாள்

**ஏர்னெஸ்ட் ஹெமிங்வே** , நோபல் பரிசு பெற்ற அமெரிக்க எழுத்தாளர் (பி.1899) (இ.1961)



**டக்லஸ் எங்கல்பர்ட்** , கணினிச் சுட்டியைக் கண்டுபிடித்தவர் (பி.1925) (இ.2013)



**எலீ வீசல்** , இனவழிப்பில் இருந்து தப்பியவர், செயற்பாட்டாளர் (பி.1928) (இ.2016)

